**செய்தி வெளியீடு எண்: 644** **நாள் : 08.12.2015**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (8.12.2015) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் திரு. வேணு ஸ்ரீனிவாசன் அவர்கள் 5 கோடி ரூபாய்.

2. TAFE லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன் அவர்கள் 3 கோடி ரூபாய்.

3. சத்குரு ஸ்ரீ மாதா அம்ரிதாநந்தமயி தேவி அவர்களின் சார்பில், மாதா அம்ரிதாநந்தமயி மடத்தின் அறங்காவலர் சுவாமி இராமகிருஷ்ணாநந்தா புரி அவர்கள் 5 கோடி ரூபாய்.

4. ஜாய் ஆலுகாஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஜாய் ஆலுகாஸ் அவர்கள் 3 கோடி ரூபாய்.

5. இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. என். சீனிவாசன் அவர்கள் 2 கோடி ரூபாய்.

6. ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஒய்.கே. கூ அவர்கள் 2 கோடி ரூபாய்.

7. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் முதன்மை பொது மேலாளர் திரு. பி. ரமேஷ் பாபு அவர்கள் 1 கோடி ரூபாய்.

8. சிட்டி யூனியன் பாங்க் லிமிடெட் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் என். காமகோடி அவர்கள் 1 கோடி ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 22 கோடி ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (8.12.2015) அளிக்கப்பட்டுள்ளது.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**
**நாள்: 8.12.2015**